**செய்தி வெளியீடு எண்: 858** **நாள்: 01.12.2019**

# செய்தி வெளியீடு

தமிழக மக்களுக்கு தீயணைப்புத்துறையின் அன்பான வேண்டுகோள்!!!!

வடகிழக்கு பருவமழையால் ஏற்படும் வெள்ள அபாய மீட்பு பணிகளை எதிர்கொள்ள தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை தயார் நிலைபடுத்தப்பட்டுள்ளது. வெள்ளத்தில் சிக்கியோரை மீட்கவும் பாதுகாப்பு இடங்களுக்கு வெளியேற்றவும் போதுமான மீட்பு ரப்பர் படகுகள், மிதவை உபகரணங்கள், நூல் ஏணிகள், நீட்டிப்பு ஏணிகள், மீட்டலுக்கான மிக நிளக்கருவிகள் மற்றும் தேவையான அனைத்து உபகரணங்கள் ஊர்திகளுடன் மீட்பு பணி வீரர்கள் ஆயத்த நிலையில் உள்ளனர்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் 21 கமாண்டோ தீயணைப்பு வீரர்கள் கொண்ட குழு போதிய மீட்பு உபகரணங்களுடன் வெள்ள மீட்புக்கென பிரத்யேகமாக உருவாக்கி விழிப்புடன் வைக்கப்பட்டுள்ளனர். மேலும் தமிழ்நாட்டிலுள்ள 331 தீயணைப்பு ரூ மீட்பு நிலையங்களில் மீட்பு பணிகளில் ஈடுபட 24 மணி நேரங்களில் படைதிரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

எனவே வெள்ளத்தினால் ஏற்படும் எந்த ஒரு பாதிப்பிற்கும் பொதுமக்கள் கீழ்கண்ட தொலைபேசிகள் மூலம் உடனடியாக தீயணைப்புத்துறையை தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். 101 (சென்னை பெருநகர் உட்பட அனைத்து மாவட்ட தலைநகரங்கள்)

சென்னை பெருநகரத்திற்கு கூடுதலாக கீழ்க்கண்ட தொலைபேசி எண்கள்

28554309
28554311
28554313
28554314
28554376

**இயக்குநர்,**
தமிழ்நாடு தீயணைப்பு மற்றும்
மீட்புப் பணிகள் துறை.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**